இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

அவர் அறிவு தெளிந்தவராய், ‘என் தந்தையின் கூலியாள்களுக்குத் தேவைக்கு மிகுதியான உணவு இருக்க, நான் இங்குப் பசியால் சாகிறேனே! நான் புறப்பட்டு என் தந்தையிடம் போய், ‘அப்பா, கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன்; இனிமேல் நான் உம்முடைய மகன் எனப்படத் தகுதியற்றவன்; உம்முடைய கூலியாள்களுள் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன்’ என்று சொல்லிக்கொண்டார். உடனே அவர் புறப்பட்டுத் தம் தந்தையிடம் வந்தார். (லூக்கா 15: 17-20)

# திருஅவையில் ஒன்றிணைந்த பயணம் இன்றியமையாதது !

## கர்தினால்மார்கள் வலியுறுத்து

**வத்திக்கான்:** ஆகஸ்ட் 30, கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு, வத்திக்கானின் புனித பேதுரு பெருங்கோவி லில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் தலைமையில் கர்தினால்கள் அனைவரும் கூட்டுத்திருப்பலி நிறைவேற்றினர்.

அன்று, திருஅவையில் ஒன்றிப்பு நிலவவேண்டியதன் முக்கியத்துவம், கடவுள் அனைவர் மீதும் வைத்துள்ள அன்பிற்கு மறைப்பணி வழியாகச் சான்றுபகரத் திருஅவைக்கு விடுக்கப்பட்டுள்ள அழைப்பு, திருஅவையில் பொதுநிலையினரின் பங்கு போன்ற தலைப்புகளில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கர்தினால்களோடு கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டார்.

அண்மையில் வெளியிடப்பட்ட, திருப்பீட தலைமையகத்தின் சீர்திருத்தம் பற்றிய Praedicate Evangelium என்ற புதிய திருத்தூது கொள்கைத்திரட்டை மையப் படுத்தி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 197 கர்தினால்களோடு, ஆகஸ்ட் 29 மற்றும் 30 ஆகிய இரண்டு நாள்கள் கூட்டம் ஒன்றை நடத்தினார்.



*திருத்தந்தையின் தலைமையில் கர்தினால்கள் கூட்டம்*

மேலும், திருஅவையில் பொதுநிலையினரின் பங்கு குறித்து, அன்று கர்தினால்கள் மொழிவாரியாக கலந்துரையாடிய கருத்துக்கள், பரிந்துரைகள், கேள்விகள் ஆகியவை பற்றி, முதல் அமர்வில், கருத்துப்பரிமாற்றங்கள் இடம்பெற்றன.

பின்னர், முதல் அமர்வு குறித்து வத்திக்கான் செய்தியாளர்களிடம் பேசிய, உரோம் இறையன்பு பங்குத்தளப் பொறுப்பாளராகிய, இத்தாலிய கர்தினால் Enrico Feroci அவர்கள், கிறிஸ்தவர்கள் அனைவரும் ஒருவர் ஒருவரை அன்புகூர்வதற்குச் சான்றுபகர்தல், இன்றைய சமுதாயம் நற்செய்திக்குத் திறந்தமனதாய் இருப்பதில் எதிர்கொள்ளும் பிரச்சனைகள், இன்றைய உலகம் எதிர் கொள்ளும் சவால்களுக்குப் பதிலளிக்கும் வழிகள் போன்றவை அக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாகக் கூறினார்.

திருப்பீட தலைமையகத்திற்கும், மறைமா வட்டங்களுக்கும் இடையே உரையாடல், மற்றும் செவிமடுத்தல் இருக்கவேண்டியதன் அவசியம், திருஅவையில் உடன்பிறந்த உணர்வு மேலோங்க வேண்டியதன் தேவை, நற்செய்தி அறிவிப்புப்பணி போன்ற தலைப்புக்களிலும் கர்தினால்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்தனர் என்று, பிரேசில் நாட்டின் அமேசான் பகுதியான Manaus பேராயர் கர்தினால் Leonardo Steiner அவர்கள் கூறியுள்ளார்.

# குவந்தான் பள்ளிவாசலில் சமயங்களுக்கிடையில் நல்லிணக்க மதிய உணவு ஒன்றுகூடல் நடைப்பெற்றது

**குவாந்தான்:** கடந்த செவ்வாய்க்கிழமை, 23 ஆகஸ்ட் 2022 அன்று குவாந்தனில் உள்ள சுல்தான் அஹ்மட் I மாநில பள்ளிவாசல், மாநகரின் ஆன்மீக/சமயத் தலைவர் களிடையே ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தது. இது அவர்களின் “மெராராவ் ஹார்மோனி” “Program Merarau Harmoni” (மஸ்ஜித் நெகிரியின் நல்லிணக்க மதிய உணவு) திட்டத்தின் ஒரு பகுதியாக அமைந்தது. மெராராவ் என்பது டேவான் பஹாசா டான் புஸ்தாகா (DBP) எனும் அமைப்பால் புதிதாக உருவாக்கப்பட்ட ஒரு சொல்லாகும், அதாவது மதிய உணவு ஒன்றுகூடல் என்பதாகும்.

குவாந்தான் புனித தோமா பங்கின் பங்குத்தந்தை ஜோர்ஜ் பாக்கியசாமி மற்றும் பங்கு கிறிஸ்தவ ஒன்றிப்பு மற்றும் சமயங்களுக்கிடையிலான விவகார பணிக்குழுவின் தலைவர் பிஃடெரிக் லிம் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். மேலும் பல சமயத் தலைவர்களும் பொறுபாளர்களும் கலந்து கொண்டனர், அவர்களில் குவாந்தான் தமிழ் மெதடிஸ்ட் தேவாலயம், ஸ்ரீ மகா மாரியம்மன் கோவில் மற்றும் குவாந்தான் இந்து சங்கத்தின் பிரதிநிதிகளும் அடங்குவர்.

அன்று வருகைத்தந்த விருந்தினர்களை டத்தோ உஸ்தாஸ் ஹாஜி பட்லி ஷா பின் ஹாஜி அலாவுதீன் (மாநில பள்ளிவாசலின் தலைமை இமாம் மற்றும் தலைவர்), துவான் முகமது அஃபாண்டி பின் அப்துல் ராணி (JAIS தலைவர்), இமாம் முஹம்மது இஸ்ஸான் இட்ரிஸ் மற்றும் இஞ்சே முஹம்மது ஹபிசுதீன் பின் தாஜுதீன். மற்றும் பள்ளிவாசலின் மற்ற குழு உறுப்பினர் ஆகியோர் வரவேற்றனர்.

டத்தோ உஸ்தாஸ் பட்லி ஷா தனது உரையில், அனைத்து மதத்தினரிடையே நல்லிணக்கத்தை உருவாக்குவதும், சமூக வாழ்வை மேம்படுத்துவதும், குவாந்தனில் உள்ள நிகழ்ச்சிகளின் நோக்கம் என்று குறிப்பிட்டார். பல இன மற்றும் பல மதங்களைக் கொண்ட தேசத்தில் சமயப்



புரிதல், அதன் போதனைகள் பற்றிய சிறந்த கண்ணோட்டம், சகோதரத்துவம் மற்றும் சகோதரத்துவ உணர்வைக் கட்டியெழுப்ப பாடுபடுவதற்கான விருப்பத்தையும் அவர் வலியுறுத்தினார். பள்ளிவாசலில் அனைத்து சமயத் தலைவர்களுக்கும் இடையிலான முதல் சந்திப்பு இது என்றும், எதிர்காலத்தில் இதுபோன்ற பல கூட்டங்கள் தொடர்ந்து நடைபெறும் என்றும் அவர் நம்பிக்கைத்




*மதிய உணவு சந்திப்பில் கலந்துகொண்ட பல்சமய பொறுப்பாளர்கள்*

தெரிவித்தார். மாநில பள்ளிவசாலில் வாரிய இயக்குநராக இருக்கும் துவான் முகமட் அஃபாண்டி, நமது வழிபாட்டுத் தலங்களில் சமயங்களுக்கு இடையேயான உரையாடல் களில் ஈடுபடவும், கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும், சமயங்களுக்கு இடையே நல்லிணக்க ஒருங்கிணைப்பை உருவாக்கவும் அனைவரையும் ஊக்குவித்தார்.

# ‘மனநோய் வெட்கப்பட வேண்டியது ஒன்றல்ல’

## மனநல மருத்துவர் அறிவுறுத்து

**பட்டர்வொர்த், பினாங்கு:** மனநலம் குறித்த சொற்பொழிவு கடந்த 21 ஆகஸ்ட் 2022 அன்று. இங்குள்ள கன்னி மரியா பிறப்பு ஆலய மாநாட்டு அறையில் ஒரு குடும்ப மருத்துவரான டாக்டர் ஞானசேகரன் சேவியர் அவர்களால் வழங்கப்பட்டது. டாக்டர் சேவியர் 40 ஆண்டுகளாக மருத்துவப் பயிற்சியாளராக இருந்து, மலேசிய மருத்துவர்கள் சங்கத்தின் முக்கிய உறுப்பினராக இருந்து வருக்கிறார்.

இச்சொற்பொழிவில், ஏறக்குறைய 30 பங்கு மக்கள் மனநோய் பற்றிய இந்த நுண்ணறிவு பகிர்வில் கலந்து கொண்டனர். மனநோய் வாழ்வின் ஒரு அங்கம் என்றும், அது எந்த வயதினருக்கும், எப்போது வேண்டுமானாலும் வரலாம் என்றும் டாக்டர் சேவியர் சுட்டிக்காட்டினார். அதே வேளையில் தீர்க்க முடியாத பிரச்சினைகள் எதுவும் இல்லை என அவர் வலியுறுத்தியுள்ளார். சில பிரச்சனைகளுக்கு அதிக நேரம் தேவைப்பட்டாலும் ஒவ்வொரு பிரச்சனைக்கும் தீர்வு உண்டு என்றார்.

மன ஆரோக்கியம் அல்லது நலம் என்பது உணர்ச்சி, உளவியல் மற்றும் சமூக நல்வாழ்வை உள்ளடக்கியது. நாம் எப்படி சந்திக்கிறோம், உணர்கிறோம் மற்றும் செயல்படுகிறோம் என்பதைப் அது பாதிக்கிறது. மேலும் மனநலமானது, மன அழுத்தத்தை நாம் எவ்வாறு கையாளுகிறோம், மற்றவர்களுடன் எவ்வாறு தொடர்பு கொள்கிறோம் என்பதையும் இது தீர்மானிக்கிறது. மனச்சோர்வு, பதட்டம், உணவுக் கோளாறுகள் மற்றும் ஆளுமைக் கோளாறுகள் உள்ளிட்ட சில வகையான மனநோய்கள் நம் மத்தியல் உள்ளன என்று மேலும் எடுத்துரைத்தார்.

தொடர்ந்து, மனநோய் ஒரு நபரின் சிந்தனை, மனநிலை மற்றும் நடத்தையில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடும் என்று டாக்டர் சேவியர் விளக்கினார். இது ஒருவரது செயலாற்றுத் திறனைக் குறைக் கலாம் மற்றும் இயலாமை, மனப்புண், சுதந்திர இழப்பு மற்றும் மரணத்திற்கும்



*சொற்பொழிவில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர்.*

வழிவகுக்கும். உதாரணமாக, பதட்டம் மிகுந்த பயம் மற்றும் கவலை போன்ற உணர்வுகளை ஏற்படுத்தக்கூடும் என்பதை தெளிவுப்படுத்தினார்.

இறுதியாக, கேள்வி-பதில் அமர்வை நிறைவு செய்வதற்கு முன், டாக்டர் சேவியர், நமது உடல் அதன் நலத்துடன் தொடர்புடையது என்பதால், மனநலத்தை அனைவரும் மக்கியமானதொன்றாகக் கருத வேண்டும் என்று குறிப்பிட்டார். மனநோய் என்பது ஒவ்வொருவருக்கும் எந்த நேரத்திலும் ஏற்படக்கூடிய ஒன்று, அதிலிருந்து எளிதில் வெளியேற முடியும் என்று ஒருவர் நினைக்கக்கூடாது. எல்லாவற்றிற்கும் மேலாக, மனநோய் வெட்கப்பட வேண்டிய ஒன்றல்ல என்றும் அறிவுறுத்தினார். (nbvmscic.org)




**அறிவிப்பு**

**இவ்வாரம் முதல்**

**தெ ஹெரால்டு (இறைத்தூதன்)**

**உங்கள் பங்குகளில் கிடைக்கும்.**

**வாங்கி வாசிக்கத் தவறாதீர்கள்!**

# ‘அன்னை மரியாவை உங்கள் வீட்டிற்கு கொண்டு செல்லுங்கள்’

## மெந்தகாப் பங்குத் திருவிழாவில் வேண்டுகோள்!

**மெந்தகாப்:-** இங்குள்ள இடைவிடா சகாய அன்னை பங்குத் திருவிழா, கடந்த ஆகஸ்ட் 19 முதல் 22, 2022 வரை கொண்டாடப் பட்டது.

ஆகஸ்ட் 19 அன்று, பங்குத்தந்தை தெரன்ஸ் தோமஸ் அவர்கள் "வியாகுல அன்னை’ தலைப்பில் திருப்பலியில் மறையுரையாற்றினார். இந்த கொண்



*ஆலயத்தைச் சுற்றி நடைபெற்ற திருபவனியில் கலந்துகொண்ட இறைமக்களில் ஒரு பகுதியினர்*

டாட்டம் ஆகஸ்ட் 22 அன்று முடிவடைந்தது. மேலும் நமது அன்னையின் இடைவிடா உதவிக்காக நவநாள்கள் மேற்கொள்ளப்பட்டன. அன்று காலை திருப்பலி பங்குத்தந்தை தெரன்ஸ் தோமஸ் அவர் களால் கொண்டாடப்பட்டது.

பெந்தோங்கில் உள்ள திருஇருதய ஆண்டவர் பங்கின் பங்குத்தந்தை கிளமென்ட் லிம் அவர்களின் தலைமையில் மாலையில் திருவிழா திருப்பலி கொண்டாடப்பட்டது. வெளிமாநிலங்களில் இருந்து கத்தோலிக்கர்கள் உட்பட சுமார் 400 இறைமக்கள் திருப்பலி, நவநாள், திருபவனி நற்கருணை ஆசீர்வாதத்தில் கலந்து சிறப்பித்தனர். "மரியா, அன்பின் தாய்" என்ற தலைப்பில் அருள்தந்தை லிம் மறையுரையாற்றினார்,

"நாம் நம் தாயை எவ்வளவு அன்பு செய்கிறோம்? இயேசு யோவானிடம்— இவரை உங்கள் தாயாக ஏற்றுக்கொள்ளுங்கள்’ என்றார். நாம் இயேசுவையும் நம் தாயையும் எவ்வளவு அன்பு செய்கிறோம் என்பதை வெளிப்படுத்த அன்னை மரியாவை, நம் இல்லத்திற்கு அழைத்துச் செல்வோமா? எனும் கேள்வியை எழுப்பினார்.

அவர் மேலும் அன்னை மரியா யோவானைப் தன் மகனாக ஏற்றுக்கொண்டார் அவ்வாறே யோவானும் மரியாவை தனது தாயாக ஏற்றுக்கொண்டார். மேலும் அன்னை மரியா 'நான் ஆண்டவரின் அடிமை, உமது திருவுளப்படி எனக்கு நிறைவேறட்டும்' என்று கூறினார். நாம் அன்னை மரியாவை மதிக்கிறோம், அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறோமா? என்று இறைமக்களை அருள்தந்தை லிம் கேட்டார்.

அவ்வாறே, 'நம்முடைய பிள்ளைகள் மற்றும் வாழ்க்கைத் துணையை நாம் எவ்வளவு அன்பு செய்கிறோம்?' என்ற கேள்வியையும் எழுப்பினார். தியாகம் என்பது அன்பு அல்ல. ஆண்டவர் பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன் என்றார். அன்னை மரியா கடவுளின் விருப்பத்தை ஏற்றுக்கொள்கிறார். அன்பு இரக்கத்திலும் கருணையிலும் வெளிப்படுகிறது. உங்களால் உங்கள் எதிரிகளை அன்பு செய்ய முடியுமா? நாம் தந்தையின் விருப்பத்திற்கு செவிசாய்க்க முடியுமா? நீங்கள் என்ன இறைவேண்டல் செய்கிறீர்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? அன்னை மரியா சீடர்களை தம் மகன்களாக எடுத்துக் கொள்கிறார். அன்பு அது தானாக வருவதல்ல. அன்பு இறைவேண்டலிலும் கொடுப்பதிலும் வெளிப்படுகிறது என்று மறையுரையை நிறைவுச் செய்தார்.

இறுதியாக, ஆலயத்திற்கு வெளியே ஒரு சிறிய அளவிலான பவனி இடம்பெற்றது. தொடர்ந்து, மீண்டும் தேவாலயத்தில் நற்கருணை ஆசீர்வாதம் நடைபெற்றது.

# நான் யார்? இளையவனா? மூத்தவனா?

இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் 24-ம் ஞாயிறு. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பாவிகளைத் தேடி மீட்டதையும் (லூக் 19: 10) பாவிகளோடு இருந்ததையும் (மத் 9: 10) பார்த்த பரிசேயக்கூட்டம், “இவர் பாவிகளை வரவேற்று அவர்களோடு உணவருந்துகிறாரே” என்று அவருக்கு எதிராக முணுமுணுக்கத் தொடங்குகிறார்கள். அப்பொழுது இயேசு, தான் ஏன் பாவிகளைத் தேடி மீட்கிறேன், எதற்காக அவர்களோடு தன்னை ஒன்றித்துக் கொள்கிறேன் என்பதை விளக்க, காணாமல் போன ஆடு உவமை, காணாமல் போன திராக்மா உவமை, காணாமல் போன மகன் உவமை என்ற மூன்று உவமைகளைச் சொல்கின்றார். இம்மூன்று உவமைகளிலும் அடிநாதமாக இருப்பவை, காணாமல் போதல், கண்டு கொள்ளுதல், மகிழ்ச்சி உண்டாகுதல் என்ற மூன்றும்தான்.

காணாமல் போனதைக் கண்டெடுக்கும் போது கிடைக்கும் மகிழ்ச்சி மிகப்பெரியது. விண்ணகத்தின் மகிழ்ச்சி ஒரு பாவியின் மனமாற்றத்தில் உள்ளது. காணாமல் போன ஆடு, தன்னுடைய முட்டாள் தனத்தால் ஆயனை விட்டு வெளியேறியது. ஆயனின் அன்பைத் தொடர்ந்து சுவைக்க மறந்தது. இந்த ஆட்டைப் போல, நமது சிற்றின்ப ஆசைகளால் இறைவனை விட்டு விலகிச் செல்கின்றோம். காணாமல் போன நாணயம் கண்டெடுக்கப்பட்ட போது கிடைக்கின்ற மகிழ்ச்சி மிக அதிகம். காணாமல் போன நாணயத்தை இரவு, பகல் பாராமல் தேடுவதைப் போல, இறைவனும் பாவத்தால் சிதறிப்போன நம்மை நாடி, தேடி, ஓடி வருகிறார். இரண்டு மகன்களில் ஒருவன் திசை மாறிப் போனதை நினைத்து எந்தவொரு தந்தையும் மகிழ்ச்சியடைய மாட்டார், திரும்பி வரும் வரை காத்திருப்பார். தீய நட்பில், வேண்டாத பழக்க வழக்கத்தைக் கையாண்டு இருந்த செல்வத்தை இழந்தான். தந்தையின் அன்பை இழந்தான். எல்லா மனிதரும் மீட்புப் பெறவும், உண்மையை அறிந்துணரவும் வேண்டுமென இறைவன் விரும்புகிறார் என்கிறார் புனித பவுல்.

செல்வம் இளையவனை அழித்தது. பன்றி மேய்ப்பவன் சபிக்கப்பட்டவன் என்றிருந்த யூத சமுதாயத்தில், நாம் எந்த நிலையில் இருந்தாலும், நம்மை வெறுக்காத கடவுளாக, அரவணைக்கும் தந்தையாக உருகினார். மனந்திரும்பிய மகனைத் தந்தை ஏற்றுக் கொண்டார். கடவுளுடைய அன்பு மனிதனுடைய அறியாமையையும், சோதனைக்குட்படுத்தப்படுத்தும் கவர்ச்சியான வார்த்தைகளையும், குளிர்ச்சிப் படுத்தும் இதயத்தையும் தோற்கடிக்கும் தந்தையின் அன்பில் நிலைத்திருப்போம். ஆடு, பணம் போன்ற விட மனிதன் சிறந்தவன். தவறு செய்து மீண்டும் திரும்பி வரும் போது கடவுள் அவனை ஏற்றுக் கொள்கிறார்.

அதே வேளையில் மனம் திரும்பி வந்த தன் தம்பியை ஏற்க மறுக்கும் அண்ணனும் பாவம் செய்கிறான். திருந்தி, வருந்தி வருவோரை ஏற்க வேண்டும். மீண்டும் சரிநிகர் மதிப்பை அளிக்க வேண்டும். எகிப்திலிருந்து அழைத்து வந்த இஸ்ரேயல் மக்கள் சிலை வழிப்பாடு செய்ததால் அவர்களை அழித்து விட திட்டமிட்ட இறைவனிடம் மோசே பரிந்து பேசுகிறார். ஆண்டவரும் தம் எண்ணத்தை மாற்றிக் கொண்டார். மனிதரை அழிப்பதல்ல, மாறாக அவர்களை வாழவைப்பதே கடவுளுடையத் திட்டமாகும். எனவே, மனமாறுவோம், தந்தையுடம் திரும்புவோம்.

*-சவரிநாதன், சுங்கை பட்டாணி*

**ஆண்டின் பொதுக்காலம் 24-ம் ஞாயிறு**

1-ம் வாசகம் வி.ப. 32: 7-11, 13-14
தி. பாடல்: 51: 1-2. 10-11. 15,17
2ம் வாசகம்: 1திமொ 51: 1-2.
நற்செய்தி: லூக்கா 15: 1-32

**ஞாயிறு வாசகம் ஆண்டு 3**
**வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 3**